
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1117

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

49

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# ‘ராஜகுமாரி’ முதல் படத்திலேயே முத்திரை பதித்த கலைஞர்!

**1947**-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 11-ஆம் நாள் திரைக்கு வந்த படம், ‘ராஜகுமாரி’. இயக்கம் ஏ.எஸ்.ஏ.சாமி . தயாரிப்பு ஜுபிடர் பிக்சர்ஸ். திரையில், வசன உதவி ஆசிரியர் மு.கருணாநிதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல எம்.ஜி.ராம்சந்தர் என எம்.ஜி.ஆர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

கலைஞர் தன்னுடைய 23-ஆம் வயதில் வசனம் எழுதிய முதல் படம் என்பதைப் போலவே எம்.ஜி.ஆர். கதாநாயகனாக நடித்த முதல் படமும் இதுதான். அதற்கு முன் ‘சதிலீலாவதி’ தொடங்கி, சுமார் 13 படங்களில் எம்.ஜி.ஆர். துணைக் கதாபாத்திரங்களில் மட்டுமே நடித்திருந்தார்.

சுதந்திரத்திற்கும் முன் வந்த இப்படம், அன்றைய காலகட்ட வழக்கப்படி 20-க்கும் மேற்பட்ட பாடல்களுடன் மந்திர, மாயாஜால காட்சிகள் நிறைந்த சரித்திரப் படமாக எடுக்கப்பட்டுள்ளது.

படத்தின் கதை : அரசன் (எஸ்.வி.சுப்பையா) மகள் மல்லிகா (கே.மாலதி) காட்டிற்கு தோழிகளுடன் வேட்டைக்குச் செல்கிறாள். அங்கு மானை நோக்கி அவள் எய்த அம்பு சுகுமார் (எம்.ஜி.ஆர்.) என்ற இளைஞன் கையில் பட்டு, அவனுக்குக் காயம் ஏற்படுகிறது. காயத்துக்கு இளவரசி மல்லிகா மருந்து இடுகிறாள். இருவருக்கும் இடையே காதல் அரும்புகிறது.


ஆனால், இதனைக் கேள்வியுறும் சுகுமாரின் தாய் (எம்.எம்.ராதாபாய்) அரண்மனை சகவாசம் வேண்டாம் என்று தடுக்கிறாள். அதை மீறி, தொடர்ந்து அவர்கள் சந்திப்பதை அறிந்து கோபம் கொள்ளும் மல்லிகாவின் முறைமாப்பிள்ளை ஆலகாலன் (டி.எஸ். பாலையா) சுகுமாரின் தாயைச் சந்தித்து, ‘உனது மகனைக் கொன்றுவிடுவேன்’ என்று எச்சரிக்கிறான். இதனால், சுகுமாரின் மல்லிகாவுடனான காதல் முறிகிறது.

ஒருதலையாக மல்லிகாவைக் காதலிக்கும் ஆலகாலன், மல்லிகாவை மயக்க அரண்மனை சேவகன் நல்லான் (எம்.சி.மாதவன்) உதவியுடன் மந்திரவாதியைச் (எம்.ஆர்.சுவாமிநாதன்) சந்தித்து உதவி கேட்கிறான். ஆனால், மந்திரவாதியும் அவனது சீடனும் (புளிமூட்டை ராமசாமி) சேர்ந்து ஆலகாலனை ஏமாற்றி, மல்லிகாவைத் தங்களது ஜாலத் தீவுக்குக் கடத்திச் சென்றுவிடுவர்.

இதையறிந்து, அவளை மீட்பதற்காக ஆலகாலன் ஜாலத்தீவுக்குச் செல்கையில், மந்திரவாதி தனது சக்தியால் சூறாவளியை உருவாக்கி, ஆலகாலன் வரும் கப்பலை மூழ்கடித்து, அவனை சிறைப்படுத்திவிடுவான்.

இதனைக் கேள்விப்படும் அரசர், இளவரசியை மீட்டு வருபவருக்கே அவளைத் திருமணம் செய்து கொடுப்பதாக அறிவிக்கிறான். இவ்வறிவிப்பைக் கேட்டு, சுகுமார் தனது தாயின் அனுமதியுடன் ஜாலத் தீவு நோக்கி போகிறான். ஆனால், படகுக்காரன் வேறொரு தீவில் இறக்கி விட்டுவிடுகிறான். அங்கு பகு (எம்.என்.நம்பியார்) அவன் தங்கை பகுனி (எம்.சிவபாக்கியம்) ஆகியோரது நட்பு கிடைக்கிறது. அந்தத் தீவின் அரசி விஷாராணி (கே.தவமணி தேவி) நடத்தும் போட்டியில் வென்று, அவளிடம் உதவியாக கப்பலைக் கேட்டுப் பெற்று, ஜாலத் தீவுக்குப் போகலாம் என சுகுமார் முடிவுசெய்து விஷாராணி வைக்கும் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெறுகிறான்.





படங்கள் உதவி : ஞானம்

### மந்திரக்கோல்! மாயக் கம்பளம்!

ஆனால் விஷாராணியோ, தனது இச்சைக்கு இணங்கச் சொல்கிறாள். மறுக்கும் சுகுமாரன் மற்றும் அவனுக்கு உதவி செய்யும் பகு, பகுனி ஆகிய மூவருக்கும் மரண தண்டனை அளித்து சிறையில் அடைக்கிறாள். அங்கிருந்து தப்பும்போது அவர்களுக்கு, ஒரு பொந்தில் இருந்து மந்திரக்கோல், மாயமோதிரம், பறக்கும் கம்பளம் ஆகியவை கிடைக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தி, ஜாலத்தீவு சென்று மந்திரவாதியுடன் சண்டையிட்டு, மல்லிகாவை மீட்கின்றனர். ஆலகாலனையும் காப்பாற்றி அழைத்து வருகின்றனர்.

வரும் வழியில், மல்லிகாவை ஏமாற்றி மயக்கமடையச் செய்து, அரசனிடம் கொண்டு வந்து ஒப்படைத்துத் தானே மீட்டு வந்ததாகப் பொய் சொல்கிறான் ஆலகாலன். அதையடுத்து, ஆலகாலனுக்கும் மல்லிகாவுக்கும் திருமணம் நடத்த ஏற்பாடுகள் நடக்கின்றன.

அப்போது சுகுமார், பகு, பகுனி மூவரும் வந்து திருமணத்தைத் தடுத்து நிறுத்தி, ஆலகாலனின் பொய்களை அம்பலப்படுத்துகின்றனர். அவமானமடையும் ஆலகாலன் அங்கிருந்து வெளியேறுகிறான். மல்லிகாவுக்கும் சுகுமாருக்கும் திருமணம் நடைபெறுவதுடன் படம் நிறைவடைகிறது.

### தனிமுத்திரை பதித்த எழுத்து

இந்தத் திரைப்படம் 1947-இல் நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பாக வெளி வந்ததன் காரணமாக சுகுமார், விஷாராணியின் தீவில் சந்திக்கும் பகு மற்றும் பகுனியிடம் இந்தியாவில் இருந்து தான் வந்திருப்பதாகவும், அதே போல விஷாராணியிடம் தமது பண்பாடு பற்றிக் குறிப்பிடும் இடத்திலும், இந்தியப் பண்பாடு என்னும் பெருமையுடன் குறிப்பிடுகிறான். அதாவது, தமிழ்நாட்டிற்குப் பதிலாக இந்தியா என்று குறிப்பிடப்படுவதைக் காண்கிறோம்.

> **“கலைஞர் தான் வசனம் எழுதிய முதல் படத்திலேயே, தனது மொழித்திறம் புலப்படும்படியாகக் காதல் காட்சி, நையாண்டி காட்சி, அரசியல் விமர்சனக் காட்சி என அனைத்திலும் தன்னுடைய தனி முத்திரையைப் பதித்திருப்பார்.”**

கலைஞரின் பிந்தையப் படங்களைப் போல நீண்ட வசனங்கள் இதில் இல்லை என்றாலும், அவரது பெயர் அடையாளமாகும் அளவுக்கு முத்திரை பதித்திருப்பார்.

எடுத்துக்காட்டாக, இளவரசி எய்த அம்பு பட்டு சுகுமார் காயமடையும் காட்சியில்...

**மல்லிகா** : “மன்னிக்க வேண்டும். மான் என்று நினைத்து...”

**சுகுமார்** : “மானுக்கும் மனுசனுக்கும் வித்தியாசம் தெரியாத பிராணியா நீங்கள்?”

**சுகுமார்** : “மான் பேரைச் சொல்லி, மனுச வேட்டைக்கு இப்படி எத்தனை பேரம்மா கிளம்பியிருக்கீங்க?”

**வசந்தா** : “மகாராணியின் வில் இங்கெப்படி வந்தது?”

**சுகுமார்** : “ஓகோ... மகாராணியா இது...”

**வசந்தா** : “இதென்ன காயம்?”

**சுகுமார்** : “உங்க மகாராணி மானுக்குக் குறிவச்ச லட்சணம்!”

மல்லிகா பச்சிலையைப் பறித்து வந்து, சுகுமாரின் காயத்திற்கு மருந்திடுகிறாள். அப்போது, இருவரது பார்வையும் சந்திக்கின்றன. அதைப் பார்த்து தோழி,

**வசந்தா**: “பழம் விழுந்தாலும் விழுந்தது...”

**நல்லான்** : “பால்கிண்ணத்தப் பார்த்து விழுந்தது! என்கிறான். மகாராணியும் தோழியும் விடைபெற்றுப் போகின்றனர்.”

**நல்லான்** : “கையில் பலமான காயமா?”

அடுத்து, சுகுமார் தனது வீட்டுக்கு வருகிறான். அவனது அம்மா சுகுமாரிடம் அறிவுரை சொல்கிறாள்...

**அம்மா** : “தாய் சொன்னதை இதுவரை தட்டியதில்லை. இனிமேலும் தட்டாதே சுகுமார். பெரிய இடத்து சகவாசம் என்னைக்கும் ஆபத்தப்பா. அதிலும் அவள் ராஜகுமாரி”

**சுகுமார்** : “ம்... இன்னைக்கு ராஜகுமாரி நாளைக்கு மகாராணி.”

**அம்மா** : “அரண்மனையில உள்ளவங்க சாதாரண மனுசாள் இல்லப்பா பயங்கர ஐந்துக்கள்.”

**சுகுமார்** : “என்னம்மா இப்படிச் சொல்றே, ராஜகுமாரி உன்னப் போலத்தான் இருக்கா, உன்னப் போலத்தான் அன்போடு பேசுறா... அம்மா, ராஜகுமாரி பச்சிலையை வச்சுக் கட்டுறபோது...”

**அம்மா** : “எரிச்சல் எடுத்ததாப்பா?”

**சுகுமார்** : “போம்மா... பனிக்கட்டி வச்ச மாதிரி உடம்பெல்லாம் ஜில்லுனு இருந்ததம்மா.”

**அம்மா** : “தேள் கொடுக்குல தேன் இருக்கும்னு நினைக்காதே! அரச வர்க்கமே அகங்கார வர்க்கம். அவர்களோடு பழகுறது, அளவோடு முறையோடு பழகணும்பா.”

இவ்வாறு கலைஞர் தான் வசனம் எழுதிய முதல் படத்திலேயே, தனது மொழித்திறம் புலப்படும்படியாகக் காதல் காட்சி, நையாண்டி காட்சி, அரசியல் விமர்சனக் காட்சி என அனைத்திலும் தன்னுடைய தனி முத்திரையைப் பதித்து, திரையுலகிலும் மக்கள் மனத்திலும் தனக்கென தனியான இடத்தினை உருவாக்கி இருப்பார்.

...காட்சி விரியும்

## மக்கள் விழிப்புடன் இருக்கின்றனர்!

புதுடெல்லியில் நடைபெற்ற ஏ.ஐ (AI) மாநாட்டில் உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த கல்கோத்தியா பல்கலைக்கழகம் சீன நாய் ரோபோட்டை தங்கள் தயாரிப்பு என்று ஏமாற்ற முயன்று அம்பலப்பட்டது, உலக அளவில் பேசுபொருளானது. இது தொடர்பாக, இணையவாசிகளின் விமர்சனங்கள், ஒன்றிய பா.ஜ.க. அரசின் சங்கித்தனமான பிரச்சாரத்துக்கு மக்கள் பலியாகி விடவில்லை என்பதையே காட்டுகிறது எனக் கருத்து பகிர்ந்துள்ளார், எழுத்தாளர் இரா.முருகவேள். இது தொடர்பாக, அவரது முகநூல் பதிவில் குறிப்பிடுகையில்...

கல்கோட்டியா மாணவர் ஒருவர், ‘தனக்குப் பிடித்த கம்ப்யூட்டர் லாங்குவேஜ் சமஸ்கிருதம்’ என்று சொல்லும் வீடியோ, மிகப் பெரிய அளவில் வைரல் ஆகிறது.

உலக அளவில் ஏ.ஐ. (AI) தொழில்நுட்பத்தில் இந்தியாவை முன்னணி நாடாக நிலைநிறுத்த நடத்தப்பட்ட இந்த மாநாடு, இந்தப் பல்கலைக்கழகத்தின் செயல்களால் படுமோசமான அவமானத்தைச் சந்தித்து உள்ளது.

இவை தவிர, மோசமான ஏற்பாடுகள், திருட்டு, பிரதமர் வெளிநாட்டு விருந்தினர்களின் கைகளைப் பிடித்து அரசியல்வாதி போல தூக்கியது என்று பல விமர்சனங்கள்.

கல்கோட்டியாவைக் கிண்டல் செய்யும் ஒவ்வொரு வீடியோவும் மில்லியன்கணக்கில் பார்க்கப்படுகின்றன. இந்தப் பல்கலைக்கழகத்துக்கு பி.ஜே.பி. கட்சியுடன் இருக்கும் தொடர்பு குறித்து, பல்லாயிரம் பதிவுகள் வருகின்றன.

அடிப்படை என்னவெனில், பி.ஜே.பி. அரசு தன்னை விமர்சிப்பவர்கள் ‘அர்பன் நக்சல்’, ‘தேசத் துரோகி’ என்று தொடர்ந்து வேட்டையாடி, நாட்டில் ஒரு அசாதாரணமான (UNEASY) அமைதியை நிலைநாட்டி இருந்தது. வட இந்தியாவில் படித்த, நடுத்தர வர்க்க மக்கள், பி.ஜே.பி.க்கு எதிராகப் பேசத் தயங்கும் நிலை இருந்தது.

இந்த நாய் ரோபோட் ஒரு புயலைப் போல வந்து இவற்றையெல்லாம் தகர்த்துவிட்டது. பி.ஜே.பி. ஆதரவு ஊடகங்களால் நினைத்தே பார்க்க முடியாத அளவுக்கு அரசுக்கு எதிரான, மாபெரும் விமர்சனமாக இந்தக் கல்கோட்டியா விவகாரம் மாறி யுள்ளது. இது கல்கோட்டியா பற்றியதாக மட்டும் இருக்க வாய்ப்பில்லை.

பொதுவாக, நாட்டில் இணையத்தைப் பயன்படுத்தும் அறிவுச் சமூகத்திற்கு இந்த அரசின்மீது இருக்கும் விமர்சனம் இப்படி வெடித்து இருக்கிறது. ஆனால், மொத்த நாடும் சங்கிகளின் பிரச்சாரத்துக்குப் பலியாகி விடவில்லை. அஞ்சிவிடவில்லை. வாய்ப்பு கிடைத்தால் மக்கள் தம் முன்முயற்சியைத் தங்கள் கரங்களில் எடுத்துக்கொள்கின்றனர் என்பது தெளிவாகத் தெரிகிறது’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



திராவிட ஜெ.சத்தியம்



### சமூக வலைதளப் பயிற்சியில் தலைவருடன்...

2016-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ஆம் தேதி, அன்றைய பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் தலைமையில், கழகத் தன்னார்வலர்கள் கலந்துகொண்ட சமூக வலைதளப் பயிற்சிக் கூட்டம், அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்குப் பின்னர், தலைவரை சந்தித்து புகைப்படம் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு அமைந்தது. கழகப் பணிக்கு, உரமேற்றும் இந்தப் படம், என்றும் மறக்க முடியாதது.

**– திராவிட ஜெ.சத்தியம், 8-வது வார்டு செயலாளர், ஆரணி பேரூர், சோழவரம் (வ) ஒன்றியம், திருவள்ளூர் கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### கழகம் நம்பிக்கை நட்சத்திரம்!

1966-ஆம் ஆண்டு, கழகத்தின் நான்காவது பொது மாநாடு, விருகம்பாக்கம் தேர்தல் சிறப்பு மாநாடாக, டிசம்பர் மாத இறுதியில் நடைபெற்றது. பேரறிஞர் அண்ணா தலைமை வகிக்க, மாநாட்டைத் திறந்துவைத்தார் கலைஞர். ‘அண்ணாவின் ஆட்சி அமைவது உறுதி, அதைத் தடுக்க எவராலும் முடியாது’ எனும் நம்பிக்கையை கழகத் தோழர்களிடம் அந்த மாநாடு விதைத்தது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.